78—

சேப்பாக்கம் தொகுதியில் கழிவு நீரகற்று நிலையம் கட்டுதல்.

25278*—திருமதி ஜீனத் சர்புதீன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

சேப்பாக்கம் தொகுதி, பார்டர் தோட்டம் பகுதியில் எப்பொழுதும் கழிவுநீர் தேங்குவதால், ஒரு புதிய கழிவு நீரகற்று நிலையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'உலக வங்கித் திட்டத்தின் கீழ், இப்பகுதியிலிருந்து பெறப்படும் கழிவுநீர் செல்லும் பாதாள சாக்கடைகள் இயந்திரங்கள் மூலம் தூர் எடுக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளன. அதன் காரணமாக இப்பகுதியில் கழிவு நீர் அடைப்புகளும், கழிவு நீர் தேங்குதலும் மிகவும் குறைந்துள்ளது. எனவே, தற்போது இப்பகுதியில் கழிவு நீரேற்று நிலையம் அமைக்கும் உத்தேசம் எதுவும் இல்லை'.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், பாலைவனங்களை எல்லாம் சோலை வனங்களாக்கி, பொற்கால ஆட்சியை உருவாக்கிக்கொண்டு இருக்கும் பொன்மனச் செல்வி புரட்சித் தலைவியின் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதி மக்களின் குறையைத் தீர்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு வருங்காலத்திலாவது ஒரு பம்ப்பிங் ஸ்டேஷனை ஆரம்பிப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்ற அந்த சேப்பாக்கம் தொகுதி, பார்டர் தோட்டம் பகுதியில் சுமார் 25 தெருக்கள் இருக்கின்றன. இதிலே பெரும்பாலான தெருக்கள் மிகவும் அதிக மக்கள் தொகையைத் கொண்டிருக்கிற தெருக்களாக இருந்த காரணத்தினாலேதான், அங்கே அடிக்கடி கழிவு நீர் அடைப்புகளை அகற்றும்பொருட்டு உலக வங்கித் திட்டத்தின் வாயிலாக இப்பபகுதியிலிருந்து பெறப்படுகின்ற கழிவுநீர் செல்லும் பாதாள சாக்கடைகளை இயந்திரங்கள் மூலமாக தூர் எடுக்கிற நிலையை அரசு

1995 மார்ச் 20]

மேற்கொண்டு இன்றைக்கு இதன்காரணமாக இப்பகுதியிலே கழிவுநீர் அடைப்புகளும் கழிவுநீர் தேங்குதலும் இல்லாத நிலையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு உருவாக்கி இருக்கிறது. மேலும் இங்கே கழிவு நீரேற்று நிலையம் கட்டப்படுகின்ற கருத்துருவைப் பொறுத்தவரையில் இந்தப் பகுதியில் இருக்கிற கழிவுநீர் சாக்கடையை எலலாம் அருகாமையிலே இருக்கிற நேப்பியர் பூங்கா கழிவு நீரேற்று நிடையத்துடன் இணைக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினால்தான் இப்பகுதியில் தற்சமயம் கழிவு நீரேற்று நிலையம் அமைக்கும் அவசியம் ஏற்படாது என்று கருதுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்: 79, திரு. டி. வேலையா, இருக்கையில் இல்லை.

வினா எண். 80, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

80—

மீனவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை

*34485—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலுக்குச் செல்லும் மீனவர்களை விபத்துகளிலிருந்து பாதுகாக்கும் வகையில் கம்பியில்லாத் தந்தி (Wireless) கோபுரம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்துத் துறைகளிலும் புதுமைகள் புகுத்தி, நவீன தமிழகத்தை உருவாக்கி, இன்றைக்குப் புரட்சிகளை நடத்தி வரும் நம்முடைய போற்றுதலுக்குரிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் கடற்கரையிலிருந்து கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் மீன்பிடி படகுகளுடனும் மீன்பிடி படகுகள் ஒன்றோடு ஒன்று தகவல் தொடர்பு கொள்ள நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடியில் தலா ஒரு கடலோர தொடர்பு கொள்ளும் நிலையம் நிறுவப்பட்டுள்ளது. சென்னை மீன்பிடி துறைமுகத்திலும் இதுபோன்ற தகவல் மையம் அமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான அரசாணை ஜீ.ஓ.எம்.எஸ். நம்பர் 61-இல் வெளியிடப்பட்டிருக்கிறது.